# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

---

**Friday, the 13th March 1959.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் ஸ்ரீ என். கே. பழநிசாமி அவர்கள் இன்று ஊரில் இல்லாததால் அவர்களுடைய கேள்விகள் எல்லாம் 18-ம் தேதி எடுத்துக்கொள்ளப்படும். கேள்வி எண் 754.

SRI M. KALYANASUNDARAM : Sir, there is the short notice question to be answered.

MR. SPEAKER : The Hon. the Minister for Industries will come a little late. Therefore I will take up the short notice question a little later.

*Mathematics and Science Graduate Teachers*

* 754 *Q*.—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில், கணித, விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்களின் பற்றுக்குறை எவ்வளவு ?

(ஆ) இவர்களில் அரசாங்கம், ஸ்தல ஸ்தாபனம், தனியார் பள்ளிகள், ஒவ்வொரு இனத்திலும் எத்தனை பேர் தேவை ?

(இ) இந்தப் பற்றுக்குறையை நிவர்த்திக்க அரசாங்கம் என்ன முயற்சி வகுத்துக்கொண்டிருக்கிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) *to* (*c*) The time and labour involved in collecting the particulars for answering the question will not be commensurate with the public interest which it may serve.

SRI A. VEDARATHNAM : இப்பொழுது பி.டி. கல்லூரிகளில் போதிய பயிற்சிக்கான மாணவர்கள் வருவது இல்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியும். மற்றவைகளுக்கு நூற்றுக்கணக்கான விண்ணப்பங்கள் வருகின்றன. இதற்கு அவ்வளவு விண்ணப்பங்கள் வரவில்லை என்றால், அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய ஊதியம் குறைவாகக் கொடுப்பதால் அல்லவா? அதனால் ஒரத்தநாடு பி.டி. கல்லூரிக்கு சலுகை காட்டி ஸ்டைபண்ட் போன்ற வசதிகளை அளித்து பி.டி பயிற்சிக்கு இன்னும் அதிகப்படியான மாணவர்கள் வருவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க முன் வருவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கேள்வி கணக்கு விஞ்ஞான பட்டதாரிகளைக் குறிப்பிட்டது. அங்கே ஒரத்தநாட்டில் இருப்பது பேசிக் எஜுகேஷனைக் கொண்டது. ஆகையால் அதை தனியாகக் கவனிக்க வேண்டியதாக இருக்கும்.

[13th March 1959

**Sri A. VEDARATHNAM** : அங்கும் ஹைஸ்கூல்களில் வெவ்வேறு உயர்தரப் பள்ளிகளிலும் கணித விஞ்ஞான பட்டதாரிகள் இல்லாமல் இப்பொழுது பள்ளிகள் நடந்து வருகிறது. இவைகளை அதிகரிக்கும்படி செய்வதற்கு அரசாங்கம் என்ன முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : இந்த விஷயத்தை அடுத்த ஆண்டு ஆரம்பத்திற்குள் கவனித்து வேண்டிய நடவடிக்கை எடுக்க உத்தேசித்து இருக்கிறோம்.

**Sri K. VINAYAKAM** : Sir, due to the paucity of trained teachers in these subjects, were any instances brought to the notice of the Government that in some of the district board-managed high schools, teachers trained in Social Studies, English, Science and Geography subjects were made to handle classes in Mathematics and Science subjects?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : No specific instance has been brought to our notice. But I am aware of the fact that there is scarcity of Mathematics and Science teachers in high schools.

*B.T. Colleges*

* 755 *Q.*—**Sri T. T. DANIEL** : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government propose to start B.T. Colleges in the State; and

(*b*) whether there is any proposal to start a B.T. College in the Kanyakumari district?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : (*a*) & (*b*) No, Sir.

**Sri T. T. DANIEL** : Sir, may I know whether at present in the State we are having enough number of B.T. colleges for giving admission to B.T. students, and may I also know, in view of the fact that a number of candidates are going from the district to other districts for getting admission to B.T. class, will the Government think of giving permission to start a B.T. College if any private agency comes forward to do so?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : I think we already have 16 or 17 training colleges, and we do not get sufficient number of applicants to fill all the seats. In the circumstances I do not think any purpose will be served by starting another college.

**Sri P. G. MANICKAM** : எலிமெண்டரி பாடசாலைகள் ஒன்று முதல் மூன்று வகுப்புகளில் பாடம் நடத்துவதற்கு ஆசிரியைகள் நியமிக்க வேண்டுமென்பது சர்க்காருடைய கொள்கை. ஆகவே அதிகப்படியான ஆசிரியை பயிற்சிப் பள்ளிகளை ஏற்படுத்த சர்க்கார் கவனிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**Mr. SPEAKER** : இப்பொழுது இருக்கிற பள்ளிகளுக்கே ஆசிரியர்கள் வரவில்லை என்று மந்திரி பதில் சொல்லியிருக்கிறாரே.

**Sri A. A. RASHEED** : Sir, may I know the number of B.T. colleges for women in our State ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : Four for women and thirteen for men.